# 2016 ஒக்டோபர் 27 ஆந் திகதியன்று இந்தோனேஷியா பாலியில் இந்து சமுத்திர விளிம்போர சங்கத்தின் அமைச்சரவை மட்டத்திலான கூட்டத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு மங்கள சமரவீர அவர்களினால் ஆற்றப்பட்ட உரை

மாண்புமிகு அமைச்சர்களே!

அதிமேதகையோர்களே!

மேன்மை மிக்க பேராளர்களே!

நான் முதலில் இந்தோனேஷியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அதிமேதகு அம்மணி ரெட்னோ மார்சூடி அவர்களுக்கு அவருடைய அன்புக்குரிய தந்தையார் காலமாகியதற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இச்சோக காலப்பகுதியில் எமது சிந்தனைகள் அதிமேதகு அம்மணி மற்றும் அவருடைய குடும்பத்தவர்கள் மீது லயித்துள்ளன.

நாட்டுப்புறத் தீவாகிய பாலியில் இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தின் 16வது அமைச்சரவைக் கூட்டத்தில் மேன்மைமிக்கோர்களுக்கிடையே சமுகளித்திருப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறந்த விருந்தோம்பலுடன் அதிசிறந்த ஒழுங்குகளைச் செய்து எம்மை வரவேற்றமைக்காக நான் இந்தோனேஷிய அரசாங்கத்திற்கு எங்களுடைய ஆழமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்தோனேஷியாவின் விளைபயனுள்ளதும் சிற்நததுமான தலைமைத்துவத்தின் கீழ் இக்கூட்டங்கள் இந்த சமுத்திர விளிம்போரச் சங்கத்திற்கான எமது பொதுக் குறிக்கோள்கள் மற்றும் கூட்டுத்தொலைநோக்கு ஆகியவற்றுக்கு அண்மையாக எடுத்துச் செல்லும் என்பதில் நாம் நம்பிக்கை உடையவர்களாகவுள்ளோம். முன்னைய தலைமைப் பதவி வகித்தவர்களினால் செய்யப்பட்டுள்ள பங்களிப்பு பெரிதும் பாராட்டப்படுகின்றவேளையில் செயலாளர் நாயகத்தினாலும் அவருடைய பதவியினர்களினாலும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் அவர்களுடைய முயற்சிகளும் எமது பாராட்டைப் பெறத்தக்கவைகளாகும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தேடுதல் மற்றும் பாதுகாப்புச் சேவைகளிலான ஒத்துழைப்பு மீதான இந்து சமுத்திரவிளிம்போரச் சங்கத்தின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் தற்போது கையொப்பமிட்டுள்ளமையை இட்டு நான் மகிழ்ச்சியடைகின்ற்ேன.

அதிமேதகையோர்களே!

இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தின் நிலப் பொருளாதாரம், பெண்களின் பொருளாதார வலுவளிப்புத் துறைகளிலும் நிறுவன ரீதியான பலப்படுத்துதலிலும் கடந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தின் அங்கத்துவ நாடுகளுக்கு கரிசனையுடையவைகளாகவுள்ள சில விடயங்கள் மீது ஒருசில எண்ணக்கருத்துக்களை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

இயற்கையாகவே நான் தென்னிலங்கையிலிருந்து ஓர் நேர்கோட்டிலுள்ள தென்துருவத்திற்கு வந்துள்ளேன். இங்கு சிறிதளவு நிலப்பரப்புடன் பரந்த சமுத்திரம் மட்டுமேயுள்ளது. நீலப்பொருளாதாரமானது இலங்கையையும் உள்ளடக்கி இந்து சமுத்திர விளிம்போரச் சங்க உறுப்பு நாடுகளுக்கு ஓர் கருநிலையிலுள்ள முக்கியத்தவமுடைய துறையாகத் தோன்றியுள்ளது. இந்து சமுத்திரத்திலுள்ள சமுத்திர அடித்தள வளங்கள் நாம் வைத்திருக்கும் மிகப்பெரிய சொத்துகளுக்கிடையிலுள்ளதுடன் நீலப் பொருளாதாரத் தொடர்புடைய கொடைமுனைவுகள் எமது மக்களின் பொருளாதார நிலைமைகளைப் பாரிய அளவில் உயர்த்துவதற்கான திறனைக் கொண்டுள்ளன.

எனவே இலங்கையில் சமுத்திர விஞ்ஞானங்கள் மற்றும் சுற்றாடல் மீதான அதிசிறந்த மையம் நிறுவப்படுதல் காலோசிதமான பணியாகும். முழுமையாகத் தொழிற்படாத போதிலும் இந்த மையமானது இடைப்பிறவரலாக இப்பிராந்தியத்திலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் சிறப்பறிஞர்களின் / நிபுணர்களின் திறன்களைக் கட்டி எழுப்புவதுடன் ஓர் அறிவுத்தொட்டியாகவும் சேவை வழங்குகின்றது.

இவ்வாண்டில் கொழும்பில் நடாத்தப்பட்ட இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தின் திமிங்கிலம் மற்றும் டொல்பின் ஆகியவற்றின் கவனிப்பு வேலைக்களமானது இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தின் அங்கத்துவ நாடுகளுக்கும் பங்காளிகளுக்குமிடையே வலையமைப்பு தொழிற்படுவதற்கு வசதியளித்து நிலைபேறான திமிங்கிலம் மற்றும் டொல்பின் பார்வையிடல் உல்லாசப் பிரயாணத்தில் எமது நிபுணத்துவத்தை விரிவுபடுத்துவதற்கு உதவியுள்ளது.

முறையே நவம்பர் 15 இலிருந்து 16 வரையும் மற்றும் நவம்பர் 17 இலிருந்து 18 வரையும் கொழும்பில் இந்து சமுத்திரத் தொழிற்பாட்டு முறைமைக்கான திறனைக் கட்டியெழுப்புதலுக்கான இரண்டாவது நீர்த் தொழிற்பாட்டுத் தொகுதிக் கூட்டத்திலும் சமுத்திர முன்னறிகூற்று வேலைக்களத்திலும் சகல இந்து சமுத்திரவிளிம்போரச் சங்கத்தின் பங்குபற்றுதலையும்கூட நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அதிமேதகையோர்களே!

சனாதிபதிப் பதவிக்கான தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தல்களையும் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டில் தேசிய ஐக்கிய அரசாங்கத்தின் நிறுவுதலுடன் இலங்கையில் அரசியல் தோற்றவமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டள்ளன. நாம் பின்பற்றும் திறந்ததும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான நிகழ்ச்சி நிரலின் உடன்பாட்டு அடிப்படையிலான ஆட்சியானது சனநாயகத்தையும் அதன் கட்டமைப்புகளையும் பொருளாதார முன்னேற்றத்தையும் பலப்படுத்துவதற்கான அடிப்படையாகவுள்ளது.

வெளிநாட்டிலுள்ளவர்களுக்கான சேவையும் ஈடுபாடும் எமது புதிய வெளிநாட்டுக் கொள்கையின் தரக்குறியீடாகவிருப்பதுடன் இத்தொடர்பில் இலங்கை கல்வி, மனிதவள அபிவிருத்தி மற்றும் சுகாதாரத்துறைகள் போன்ற துறைகளில் எமது நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான நாட்டத்தை நாடியுள்ளது. இத்துறைகளில் நாம் குறிப்பிட்ட அதிசிறந்த மட்டத்தை எய்தியுள்ளோம்.

இலங்கையானது முதலீட்டாளருக்கான நட்புறவு ரீதியான நிலைமையை வழங்குகின்றதுடன் சருவதேச வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான திறந்த நிலையிலுள்ளதுடன் உலக பொருளாதாரத்திற்குள் கூடுதலான இணைவை எய்துவதை இலக்காக் கொண்டுள்ள வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு ஊக்குவிப்பு வழங்கியுள்ளது.

மேன்மைமிக்க பேராளர்களே!

இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தின் 20வது ஆண்டு விழாவை நினைவு கூருவதற்காக 2017 மார்ச் மாதத்தல் இந்தோனேஷியாவில் நடாத்தப்படவுள்ள முதலாவது இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தின் உச்சி மநாட்டை நாம் எதிர்பார்த்த நிலையிலுள்ளோம். நாம் பிறவற்றுக்கிடையில் கடலோர கட்டுக்காப்பு மற்றும் பாதுகாப்பு, வர்த்தக மற்றும் முதலீட்டு வசதியளித்தல், உல்லாசப் பிரயாணம், கலாசாரம், கல்வி விஞ்ஞானமும் தொழினுட்பவியலும், கடற்தொழிலும் இடர்ப்பாட்டு ஆபத்து முகாமை ஆகியவற்றில் இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தின் வகிபாகத்தை மேலும் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நாம் நம்பிக்கையுடன் காலடியை முன்நோக்கி எடுத்து வைத்துள்ளோம். நாம்முன்னேற்றத்தை அளந்து கூடுதலான சுறுசுறுப்பானதும் செயற்பாடு சார்ந்ததுமான பிராந்திய உடனுழைப்பிற்கான நெறியொன்றைத் தயாரிக்க வேண்டிய தேவையுள்ளது. நாம் விளக்கப்பட்டியலானது திட்டவட்டமான கொடைமுனைவுகளை வழங்கும் செயல்திட்டத்துடனான ஓர் தொலைநோக்கு ஆவணமாக இருக்க வேண்டுமென நம்புகின்றோம்.

இலங்கையானது இந்து சமுத்திரவிளிம்போரச் சங்கம் சுறுசுறுப்பின் புதிய சகாப்தமொன்றுக்குள் நகர்ந்து செல்வதைப் பார்க்க விரும்புகின்றது. இதன் பிரகாரம் பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கு கூட்டு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

- கடற்பிரயாணத்திற்கான சுத்நதிரம், மேலே பறத்தலுக்கான சுதந்திரம் மற்றும கடற்சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் மரபு முறைவந்த சட்டத்தையும் உள்ளடக்கி இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- இந்து சமுத்திர விளிம்போரச் சங்க நாடுகளுக்கிடையே விஞ்ஞான மற்றும் கல்வி ஒத்துழைப்பை அதிகரித்தல்
- சருவதேச சட்டத்தினாலும் ஐக்கிய நாடுகள் நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளினாலும் வழிகாட்டப்பட்டு பெறுமதியுடைய சமுத்திர வளங்களைப் பாதுகாத்தலும் பராமரித்தலும் பயன்படுத்துதலும்
- சமுத்திர அடிப்படையிலான இடர்ப்பாடுகள் மற்றும் சமுத்திர வானிலை மீதான காலநிலையின் மதிப்பிடப்படாத தாக்கத்தைக் கையாளுவதற்கான தயார் நிலையை அதிகரித்தல்
- இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்திற்குள் அபிவிருத்தி நிதிக்கான பொறிமுறையை நிறுவுதல்
- கூடுதலான தீவிரமானதும் அர்த்தமுள்ளதுமான ஒத்துழைப்பிற்காக இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தின் பங்காளிகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்துதலும் பரந்த அடிப்படையிலானதாக்குதலும்.

இந்து சமுத்திர விளிம்போரச் சங்கமானது அதன் 20வது ஆண்டைப் பூர்த்தி செய்த நிலையிலிருப்பதன் காரணமாக இந்த அமைப்பின் எதிர்கால நிலையைத் தயாரிப்பதற்கான புதிய தொலைநோக்கை நிறுவும் நோக்குடன் நடைமுறையொன்றைத் தயாரிப்பதற்கான காலம் வந்துள்ளது. இது எமது கலந்துரையாடல் பங்காளிகளைக் கூடுதலான அளவில் ஆக்கபூர்வமான ரீதியில் ஈடுபடுத்துவதையும் கூடுதலான பின்னிய செயல் விளைவையும் பங்குபற்றுதலையும் ஊக்குவிப்பதற்கான பொறிமுறைகளைப் பற்றி ஆழமாக ஆராய்வதையும் உள்ளடக்கும்.

அதிமேதகையோர்களே! மேன்மை மிக்க பேராளர்களே!

இந்து சமுத்திர விளிம்போரச் சங்கத்தை மேலும் பலப்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றி ஆக்கபூர்வமான கலந்துரையாடலையும் பாரிய பின்னிய செயல்விளைவையும் மேற்கொள்வதற்கும் இச்சங்கத்தின் இடத்தை சருவதேச அமைப்புகளின் வலையமைப்பில் மதிப்பிடுவதற்கும் புதுப்பிக்கப்பட்ட நன்னம்பிக்கையுடனும் தீவிர உற்சாகத்துடனும் சகல அங்கத்துவ நாடுகளினதும் பரஸ்பர நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்துவதற்கான சாத்தியத்தகவுகளை அவை மேற்கொள்ளுமென நான் எதிர்பார்க்கின்றேன்.

இலங்கையானது சமுத்திர விளிம்போரச் சங்கத்தை சுறுசுறுப்பான புதிய சகாப்தமொன்றுக்குள் எடுத்துச் செல்வதில் தனது பங்கைத் தொடர்ந்தும் வழங்கும்.

நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.